5th November 1958]

SRI N. R. THIAGARAJAN : இதுபோன்ற வளைவுகள் பல்வேறு இடங்களில் இருப்பதனால் விபத்துக்கள் உண்டாகின்றன. உசிலம்பட்டி கண்மாயில் நான் சென்னைக்கு வரும்போழுது இது போன்ற வளைவில் ஒரு விபத்து ஏற்பட்டதைப் பார்த்தேன். தென்னூறகாடு, தஞ்சை எல்லைகள் சந்திக்கும் இடத்தில் கூட ஒரு விபத்தை நேரில் கண்டிருக்கிறேன். ஆகவே, இந்த மாதிரி வளைவுகளை நிமிர்த்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது எங்கெல்லாம் வளைவுகள் இருக்கின்றனவோ அந்த வளைவுகளை நிமிர்த்தி பஸ்கள் போவதற்குச் சௌகரியமாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. எதை முன்னதாக எடுத்துக்கொண்டு செய்ய வேண்டுமோ அதைச் செய்து வருகிறோம்.

SRI A. V. P. ASAITHAMBI : சென்னை நகரிலே தினசரி இந்த கார் விபத்துக்கள் நடப்பதினாலே, பல தெருக்கள் சந்திக்கிற ஒவ்வொரு இடத்திலும் "Stop and go" என்ற அறிவிப்புப் பலகையைப் போட்டால் இந்த விபத்துகளை ஓரளவுக்கு தடுக்க முடியுமா ?

MR. SPEAKER : இதற்கு கனம் அங்கத்தினர் தனிக்கேள்வி போட வேண்டும்.

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது சில இடங்களில் போட்டிருக்கிறோம். எழுத்து மூலமாகக் கொடுத்தால் இதைப்பற்றி விசாரிக்க முடியும்.

Building for Fisheries School in Vedaranyam Panchaayt Area

* 890 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

வேதாரண்யம் பஞ்சாயத்தைச் சேர்ந்த ஆறு கட்டித்துறை மீனவர்கள் பள்ளி புயலில் சமாளிக்கத் தக்க கட்டிடம் கட்டித்தரப் கோரியிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes—The request is under the consideration of the Government.

SRI A. VEDARATHNAM : இந்த கிராமம் கடற்கரை ஓரத்தில் இருப்பதனால், சமீபத்தில் ஏற்பட்ட புயலில் 20 அடி கடல் தண்ணீரில் மூழ்கிப்போன கிராமம். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு "காண்டிரிபியூஷன்" கேட்கப்பட்டிருக்கிறது. ரொம்ப நாட்களாக பள்ளிக்கூடம் இல்லாததினால் அங்கேயுள்ள குழந்தைகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இதை உடனடியாக எடுத்து வேலை செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கலெக்டர் அவர்களிடமிருந்து ஒரு ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. வந்தவுடனே முடிவு செய்யப்படும்.

Petition by Kalathur village munsif

* 891 *Q.*—SRI K. ANBAZHAGAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

களத்தூர் கிராம முனிசிப் கொடுத்த ஒரு மனுவை சாக்கோட்டை சப் இன்ஸ்பெக்டர் ஏற்க மறுத்தார் என்பது உண்மையா ? அந்த மனுவை ஏற்காததால் கிராம முனிசீப், வரி வசூலிக்க இயலாது போனது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer is in the negative.

[5th November 1958

SRI K. ANBAZHAGAN : இந்த சாக்கோட்டை சப்-இன்ஸ்பெக்டருடைய நடவடிக்கையானது இன்னும் பல்வேறு முறைகளிலேயும் குற்றம் இழைத்து வருவதாக இருப்பதால், அங்கே உள்ளவர்கள் இதைப்பற்றி மேலதிகாரிகளுக்கு எழுதியிருக்கிறார்கள். அந்த அதிகாரியின் பலாத்கார நடவடிக்கையில் கூட கடுமையான துன்ப நிலைக்குச் சிலர் ஆளாகிவிட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். மேலதிகாரிகள் அவர் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த சப்-இன்ஸ்பெக்டரைப் பற்றி வேறு சில புகார்களும் வந்திருக்கின்றன. அவைகள் விசாரிக்கப்பட்டு, நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

Madhavaram Milk Colony Scheme

* 892 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Colombo Plan Dairy Consultant discussed with the Government in the month of September 1958 about the Madhavaram Milk Colony Scheme; and

(*b*) whether the New Zealand Government have offered any aid for this Scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Intimation has been received from the Government of India that the New Zealand Government have since approved a grant of L 215,000 equivalent to about Rs. 29 lakhs under the Colombo Plan.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister, Sir, whether this scheme is run on a profit?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the scheme is yet to be finalised and then taken up. There is no question of profit and loss at this stage.

Certain works given on contract without calling for tenders

* 893 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that in order to make improvements in the Old Vennar Road, Tiruchirappalli district, for about two furlongs, a retaining wall was constructed and repairs for a bridge at mile 23/2 Tiruchirappalli-Tanjore Road was given on contract without calling tenders;

(*b*) whether complaints were received against this execution; and

(*c*) if so, what action has been taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Tenders were dispensed with for the work of constructing the retaining wall which had to be executed urgently. But for the bridge at mile 23/2 of the